# பணியிடப் பாதுகாப்பை வலியுறுத்திய பயிலரங்கு



டான் டோக் செங் மருத்துவமனையின் பேரதிர்ச்சியால் பாதிக்கப்பட்டோருக்கு உதவும் ஆலோசகர் சுந்தர் பாலசுப்ரமணியம், 39, (வலது), மூத்த பாதுகாப்பு சுகாதார, சுற்றுச்சூழல் தர அதிகாரி பாண்டியன் முத்துக்கருப்பன், 55. **படங்கள்: கீர்த்திகா ரவீந்திரன்**

**கீர்த்திகா ரவீந்திரன்**

2023ல் பணியிட விபத்துகளின் எண்ணிக்கை 22,787க்குக் கூடியது. 2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 5 விழுக்காடு அதிகம்.

கடுமையான தாக்கம், கூரான பொருள் உடலைத் துளைத்தல், உயரத்திலிருந்து விழுதல் போன்ற சம்பவங்களால் ஏற்படும் காயங்கள் பணியிட விபத்துகளில் அடங்கும் என்றார் டான் டோக் செங் மருத்துவமனையின் பேரதிர்ச்சியால் பாதிக்கப்பட்டோருக்கு உதவும் ஆலோசகர் சுந்தர் பாலசுப்ரமணியம், 39.

டான் டோக் செங் மருத்துவமனையில் வெள்ளிக்கிழமை (அக்டோபர் 25) நடந்த பணியிடக் காயங்கள், தடுப்பு, மேலாண்மை செயல்முறை பற்றிய பயிலரங்கில் திரு சுந்தர் இதனைப் பகிர்ந்துகொண்டார்.



உயரத்திலிருந்து விழுவதால் ஏற்படும் ஆபத்தை எப்படிக் கையாள்வது என்பதை விளக்கும் செயல்.

டான் டோக் செங் மருத்துவமனை, பணியிடப் பாதுகாப்பு, சுகாதார மன்றத்தின் ஆதரவுடன் மத்திய வட்டார அதிர்ச்சி சேவைகள் (Central Region Trauma Services) ஏற்பாடு செய்த இந்தப் பயிலரங்கில் ஏறத்தாழ 250 பேர் கலந்துகொண்டனர். உயரத்தில் இருந்து விழுவது, கனரகப் பொருள்களால் காயமடைவது, தீக்காயங்கள், ஆபத்தான வேதிப்பொருள்களால் ஏற்படும் காயங்கள் போன்ற பணியிட ஆபத்துகளிலிருந்து எப்படி ஊழியர்களைப் பாதுகாத்து சிகிச்சை அளிக்கலாம் போன்ற குறிப்புகளும் பகிரப்பட்டன.

மேலும், இதுபோன்ற பணியிட ஆபத்துகளைக் கையாளும் மூன்று செயல் விளக்க நிலையங்கள் அமைக்கப்பட்டன.

“பணியிடப் பாதுகாப்பு தொடர்பாக அனைத்து முதலாளிகளுக்கும் ஊழியர்களுக்கும் சட்டபூர்வ கட்டாயப் பயிற்சிகள் உள்ளன. அனைத்து ஊழியர்களுக்கும் தினசரி பணியிட விளக்கவுரைகள் நடத்தப்படும்,” என்றார் ‘எட் ஸுப்லின்’ கட்டுமான நிறுவனத்தின் மூத்த பாதுகாப்பு சுகாதார, சுற்றுச்சூழல் தர அதிகாரி பாண்டியன் முத்துக் கருப்பன், 55.

“குறிப்பாக, அவர்களின் வேலையில் அதிக இயந்திரங்களின் பயன்பாடு, அல்லது அதிக உடல் வலிமை தேவைப்பட்டால் நிச்சயமாக பாதுகாப்பு தொடர்பான அறிவுரையும் பயிற்சிகளும் வழங்கப்படும். பணியிடப் பாதுகாப்புக்கு எப்போதும் முன்னுரிமை அளிப்பது, திடீரென ஏற்படும் ஆபத்துகளைக் கையாள அதிகாரிகளைத் தயார்ப்படுத்தவே இதுபோன்ற பயிலரங்குகள் உதவும்,” என்றார் திரு சுந்தர்.

“முதலுதவி பற்றிய அடிப்படை அறிவு அனைவருக்கும் இருக்க வேண்டும். பணியிடத்திலோ, பொது இடங்களிலோ ஆபத்துகள் ஏற்படலாம். கடும் காயங்களுக்கு உதவ மருத்துவ வல்லுநர்கள் உள்ளனர். ஆனால், முதலில் என்ன செய்யவேண்டும் என்பதை அறிந்திருப்பது முக்கியம்,” என்றார் அவர்.

kirthigaravi@sph.com.sg

# இளம் தொழில்முனைவோர்க்கு சவாலாக மூத்த தம்பதியர்



இந்திய மரபுடைமை நிலையத்தின் தீபாவளிச் சந்தையில் பி.உமாமகேஷ்வரி-பி.சிவகுமார் தம்பதியர்.
**படம்: உமாமகேஷ்வரி**

**ரவி சிங்காரம்**

தீபாவளிக்காகப் புதிய தொழில் ஒன்றைத் தொடங்கலாம் என நினைத்து நகை வர்த்தகத்தைத் தொடங்கியுள்ளனர் 52 வயது பி.உமாமகேஷ்வரி-பி.சிவகுமார் தம்பதியர்.

‘ஓம் ஜுவல்ஸ்’ என அழைக்கப்படும் இவ்வர்த்தகம், இந்திய மரபுடைமை நிலையத்தின் தீபாவளிச் சந்தையில் (Festival of Lights) அக்டோபர் 5ஆம் தேதியன்று தொடங்கியது.

“இளம் தொழில்முனைவர்கள் புதிய தீபாவளிக் கடைகள் வைக்கும்போது ஏன் நம்மால் முடியாது?” என்ற கேள்வி இந்த தம்பதியரின் மனத்தில் எழுந்ததால் தொடங்கிய இவ்வர்த்தகம், தற்போது நகைகளை இணையம் வழி விற்கிறது; இல்லத்திற்கு அஞ்சல்வழி அனுப்புகிறது.

**குடும்பத்தின் முதல் தொழில்முனைவர்கள்**

தம் குடும்பத்திலேயே முதல் தொழில்முனைவர்களாக இருவரும் இம்முயற்சியில் இறங்கியுள்ளனர்.

தகவல் தொழில்நுட்பத் துறையில் 30 ஆண்டுகளாகப் பணியாற்றிவரும் உமாமகேஷ்வரி, தனியார் வாடகை வாகன ஓட்டுநராகப் பணியாற்றும் சிவகுமார் இருவருக்கும் இது புதிய முயற்சி.

> “தீபாவளிச் சந்தையில் தங்கம், வெள்ளி பூசப்பட்ட பித்தளை நகைகள் நன்கு விற்பனையாகின.
>
> **உமாமகேஷ்வரி**

இவ்வர்த்தகம் தற்போது பித்தளை நகைகளையே விற்கிறது.

“பித்தளையைப் பயன்படுத்துவது கவர்ச்சிக்காக மட்டுமல்ல; நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் தன்மையையும் அது கொண்டுள்ளது. அதனால் பண்டைய காலத்திலேயே அதை அதிகம் பயன்படுத்தினர்,” என்றார் உமாமகேஷ்வரி.

இந்த தம்பதியருக்கு நெடுநாளாக ‘மீமெய்யியல்’ (metaphysics) மீது ஆர்வம் இருந்துவருகிறது. அதைப் படித்து நடைமுறையில் தம் வாழ்விலும் இருவரும் பயன்படுத்துகிறார்கள்.

“இந்திய சமூகத்தில் பலரும் மீமெய்யியல் பற்றி அவ்வளவாக அறிவதில்லை. சிலருக்குத் தயக்கமும் இருக்கிறது.

“அனைவரும் நகைகளை விரும்புவதால் நகைகள் மூலம் இது பற்றிய புரிதலை ஏற்படுத்தலாமே என எங்களுக்குத் தோன்றியது.

“இத்தகைய நகைகளை அணிவதால் ஏற்படும் பலன்களை சில வாடிக்கையாளர்கள் அறியாவிட்டாலும் அந்த பலன்கள் அவர்களைச் சென்றடையும்,” என உமாமகேஷ்வரி கூறினார்.

வேலை, குடும்பம், என பல தரப்பட்ட எதிர்பார்ப்புகள், மன உளைச்சல்கள் இருக்கும் வாழ்வில், படிகங்கள் (crystals) கொண்ட நகைகளை அணிவது உடம்புக்கும் மனத்துக்கும் ஒரு சமநிலையையும் தன்னம்பிக்கையையும் கொண்டுவரும் என்றும் இருவரும் கூறினர்.

**பல்லினத்தார், இளையர்களை ஈர்க்கும் நகைகள்**

“தீபாவளிச் சந்தையில் தங்கம், வெள்ளி பூசப்பட்ட பித்தளை நகைகள் நன்கு விற்பனையாகின. படிகங்கள் பொருத்தப்பட்ட நகைகள் மற்ற இனத்தாரையும் ஈர்த்தன,” என்றார் உமாமகேஷ்வரி.

“முழுமையாகப் பித்தளையால் செய்யப்பட்ட தோடுகளும் சங்கிலிகளும் பாரம்பரிய, நவீன உடைகள் இரண்டுடனும் நன்றாகப் பொருந்துவதால் அவை இளையர்களிடத்தில் நன்றாக விற்பனையாகின,” என அவர் தெரிவித்தார்.

“நகைகளை வாங்கும்போது அவற்றின் வெளித் தோற்றத்தை மட்டும் பார்க்காமல், அவற்றின் தன்மைகளைப் பற்றியும் மக்கள் மேலும் புரிந்துகொண்டால் பயனடைவர்,” என்றார் அவர்.

rsingaram@sph.com.sg

# விழாக்காலத்தில் லிட்டில் இந்தியாவில் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த ஏற்பாடு

தீபாவளிப் பண்டிகைக்கு இன்னும் ஒருவாரம்கூட இல்லாத வேளையில், குடும்பத்தோடு சேர்ந்து பண்டிகையைக் கொண்டாட தீவின் பல பகுதிகளிலிருந்து மக்கள் லிட்டில் இந்தியாவுக்குப் படையெடுக்கின்றனர்.

வாகனங்களை நிறுத்துவதற்காக வாகனவோட்டிகள் பலரும் அலைமோதுவதால், ரேஸ் கோர்ஸ் சாலை, பஃப்ளோ சாலை, அப்பர் டிக்சன் சாலை, டன்லப் ஸ்திரீட் போன்ற சாலைகளில் வாகனங்களின் நீண்ட வரிசை காணப்படுகிறது.

இந்நிலையில், வாகனவோட்டிகளின் வசதிக்காக தேக்கா பிளேஸ் கடைத்தொகுதி, அக்டோபர் 24 முதல் நவம்பர் 7ஆம் தேதி வரை வாகன நிறுத்தக் கட்டணத்தில் சலுகை வழங்குகிறது. லிட்டில் இந்தியா வர்த்தகர்கள், மரபுடைமைச் சங்கம் (லிஷா) மற்றும் தஞ்சோங் பகார் குழுத்தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ஆல்வின் டானின் கோரிக்கையை ஏற்று, வாகன நிறுத்தக் கட்டணத்தை தேக்கா பிளேஸ் தற்காலிகமாகக் குறைத்துள்ளது.

லிட்டில் இந்தியா செல்லும் வாகனவோட்டிகள், அனைவரின் வசதியையும் பாதுகாப்பையும் கருத்தில்கொண்டு தங்கள் வாகனங்களை உரிய நிறுத்துமிடங்களில் நிறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

